சாட்சிகள் வாக்குமூலம்
பாகம் 111 சுற்றறிக்கை உத்தரவு 2(11) உவிமுச பிரிவு 1 மற்றும் 2
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண். 284/2009

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குப்புச்சாமி (வா.சா.–1) | தொழில் | : | விவசாயம் |
| த/பெ., க/பெ. | : | லேட்.குப்பணகவுண்டர் | வயது | : | 58 |
| கிராமம் | : | தொப்பம்பட்டி | இனம் | : | ஆண் |
| தாலுகா | : | பழனி | நாள் | : | 20.12.2024 |
| மாவட்டம் | : | திண்டுக்கல் | | | |

1973 ஆம் வருடத்திய வரைமுறைச் சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்ஙனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25 ஆம் நாள் அளித்த சாட்சியம்.

<u>முதல் விசாரணை:</u>

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை சத்தியப்பிரமான நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவைதான். அவை எனக்கு நன்றாக தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கேட்டுக் கொள்கிறேன். கடந்த 30.12.1987 ஆம் தேதிய பாகப் பிரிவினை ஆவணத்தின் அசல் **வா.சா.ஆ.1** ஆகவும், கடந்த 25.11.1991 ஆம் தேதிய கிரைய ஆவணத்தின் சான்று நகல் **வா.சா.ஆ.2** ஆகவும், கடந்த 03.06.1992 ஆம் தேதிய கிரைய ஆவணத்தின் சான்று நகல் **வா.சா.ஆ.3** ஆகவும், கடந்த 24.08.2007 ஆம் தேதிய பட்டாவின் உண்மை நகல் **வா.சா.ஆ.4** ஆகவும், 12.08.1998 ஆம் தேதிய சிட்டாவின் அசல் **வா.சா.ஆ.5** ஆகவும், நிலவரி ரசீதுகள் (5 எண்ணிக்கை) அசல் **வா.சா.ஆ.6** ஆகவும், 29.04.1998 ஆம் தேதிய தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்று நகல் **வா.சா.ஆ.7** ஆகவும், 04.02.2003 ஆம் தேதிய தான செட்டில்மெண்ட் ரத்து ஆவணத்தின் சான்று நகல் **வா.சா.ஆ.8** ஆகவும், 11.05.2003 ஆம் தேதிய தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்று நகல் **வா.சா.ஆ.9** ஆகவும், 22.04.2009 ஆம் தேதிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.10** ஆகவும், 25.04.2009 ஆம் தேதிய ஒப்புதல் அட்டைகள் அசல் **வா.சா.ஆ.11** ஆகவும், 12.05.2009 ஆம் தேதிய பதிலறிவிப்பின் சார்வு

நகல் **வா.சா.ஆ.12** ஆகவும், பட்டா எண்.1043 ன் அசல் **வா.சா.ஆ.13** ஆகவும், மின் கட்டண ரசீதுகள் (11 எண்ணிக்கை) அசல் **வா.சா.ஆ.14** ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன. மேற்படி எனது சாட்சியத்தையும், சான்றாவணங்களையும் ஏற்று வழக்கில் கோரிய பரிகாரங்களை வழங்கி உத்தரவிட வேண்டுகிறேன்.

ஒம்/– S. கபாலீஸ்வரன்
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பழனி.